# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8069896

C

1. District : மாவட்டம் ஈரோடு | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு ஈரோடு | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 3/AC/2021 | Date: நாள் 02.02.2021

2. (i) Act சட்டம்: THE PREVENTION OF CORRUPTION ACT, 1988 AS AMENDED BY THE PREVENTION OF CORRUPTION ACT (AMENDMENT) 2018. | Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: —

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: —

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 19.01.2021 15.00 Hrs | Date to : நாள் வரை 02.02.2021

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.02.2021 | Time : நேரம் 10.30 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOL-I | Time : நேரம் 02.02.2021 / 1200 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 65 கி.மீ மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி தனி வட்டாட்சியர், நகர நிலவரித்திட்ட அலுவலகம் சத்திய மங்கலம், ஈரோடு மாவட்டம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. அலிமுல்லா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சனாவுல்லா

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 23-11-1987 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

   (f) Occupation : தொழில் பனியன் கம்பெனி | (g) Address : முகவரி 36A, அண்ணா நகர், தென் காடு வீதி, ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1. திரு. வேல்முருகன், தனி வட்டாட்சியர், நகர நிலவரித் திட்டம், சத்தியமங்கலம்
   2. திரு. வெங்கடேஷ், புரோக்கர், சத்தியமங்கலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதமில்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

———

10. Total value of properties stolen / involved : ———
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ———

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

சமர்பிக்கப்படுகிறது

தனித்தாளில் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M.R.திவ்யா........ பதவி ....DSP.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு உ.கு.த.க.பிரிவு, ஈரோடு)..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Ammal 2/2/21 — [signature] 02.02.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 02.02.2021 1215 Hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M.கலா...........
Rank: நிலை காவல் ஆய்வாளர்........No. எண் .........
உ.கு.த.க.பிரிவு,
ஈரோடு.

**Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 03/AC/2021 u/s 7 of PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018.**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது:**

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் M. ரேகா ஆகிய நான் 02.02.2021 தேதி காலை 10.30 மணிக்கு நிலைய அலுலவலில் இருந்தபோது திரு.S.அலிமுல்லா, த/பெ.சனாவுல்லா, 36 A, அண்ணா நகர், தேள்கரடு வீதி, ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் S.அலிமுல்லா, த/பெ.சனாவுல்லா, 36 A, அண்ணா நகர், தேள்கரடு வீதி, ரங்கசமுத்திரம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம். பெறுதல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம், கருங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், ரங்கசமுத்திரம், அண்ணாநகர், தேள்கரடு வீதி, கதவு எண். 36 A-ல் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு மகன் உள்ளார். நான் சத்தியமங்கலத்தில் நிஷாத் கார்மெண்ட்ஸ் என்ற பெயரில் பனியன் கம்பெனி சொந்தமாக நடத்தி வருகிறேன். நான் பண்ணிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். சத்தியமங்கலம் நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட ரங்கசமுத்திரம் கிராமம், அண்ணாநகர், தேள்கரடு வீதி எண்.5-ல் நத்தம் எண்.76-ல் பாகம் தற்கால நகர நில அளவைப்படி வார்டு E, பிளாக்-12, டி.எஸ்.நெ.71, பட்டா எண்.4418-ல் உள்ள 1345 ½ சதுரடி நிலம் மற்றும் அதில் உள்ள பழைய வில்லை வீடு ஆகியவற்றை கோயம்புத்தூர், காந்திநகரில் வசித்து வரும் மணியம்மாள் (எ) சின்னம்மாள் என்பவரிடமிருந்து ரூ.6 லட்சத்திற்கு வாங்கினேன். அதனை 10.12.2020-ம் தேதி சத்தியமங்கலம் ரெஜிஸ்டர் ஆபிசில் எனது பெயரில் கிரயம் செய்து கொண்டேன். அதன் ஆவண எண்.7031/2020 ஆகும். பின்னர், மேற்படி சொத்தை எனது பெயரில் பட்டா மாறுதல் செய்ய வேண்டி கடந்த ஜனவரிமாதம் 3 வது வாரத்தில் சத்தியமங்கலம் தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் ஆர்.ஐ பன்னீர்செல்வம் என்பவரை பார்த்தேன். அப்போது அவர் பட்டா மாறுதல் விண்ணப்பம் வாங்கிகொண்டு அதனுடன், எனது போட்டோ-2, பத்திர நகல் மற்றும் அதன் மூலப்பத்திர நகல் ஆகியவற்றை கொண்டுவர சொன்னார். நான் அவர் கேட்ட ஆவண நகல்கள் மற்றும் எனது போட்டோ-2 ஆகியவற்றை கொடுத்தேன். அதை பெற்றுக்கொண்ட அவர், நான் கொடுத்த ஆவணங்களை பார்த்து, பட்டா மாறுதல் விண்ணபத்தில் அவரே விபரங்களை பூர்த்தி செய்து அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார். பின்னர், ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் அவர்கள் வரட்டும் அவரிடம்

பேசிவிட்டு சொல்வதாக சொல்லி எனது செல்போன் நம்பர் 9791941441 ஐ வாங்கிக்கொண்டு என்னை அனுப்பிவிட்டார். அன்று மாலை சுமார் 3 மணியளவில் செல்போன் எண்.9626122273-லிருந்து வெங்கடேசன் என்ற புரோக்கர் எனது செல்போன் எண்ணுக்கு கூப்பிட்டு, ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் அவர்கள், நான் வாங்கிய இடத்தை பார்த்துவிட்டு வரச்சொன்னதாக சொன்னார். அதற்கு நான், வெளியில் இருப்பதாக சொன்னேன். அன்று மாலை சுமார் 6 மணிக்கு வெங்கடேசன் எனது இடத்தை பார்த்துவிட்டு சென்றதாக எனது மனைவி என்னிடம் சொன்னார். பின்னர் 19.01.2021ம் தேதி காலை சுமார் 10.30 மணிக்கு ஆர்ஐ பன்னீர்செல்வம் அவர்கள் அவரது செல்போன் எண்.9600738425 லிருந்து எனது செல்போன் எண்ணுக்கு கூப்பிட்டு, நான் வாங்கிய இடத்தை நேரில் பார்க்கவேண்டும் என்று சொன்னார். அதன்பேரில் நான் சத்தியமங்கலம் தாலுக்கா ஆபீஸ் வளாகத்தில் உள்ள ஸ்பெசல் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று ஆர்ஐ திரு.பன்னீர்செல்வம் அவர்களை பார்த்து இடத்தை பார்க்க போகலாம் என்று சொன்னேன். அப்போது அவர், அந்த அலுவலகத்தில் வேலை செய்துவந்த ஒரு பெண் அதிகாரியையும் அழைத்துக்கொண்டு, என்னுடன் வந்தார். அவர்கள் இருவரும் என்னுடைய இடத்தை அளந்து, அளவுகளை குறித்து கொண்டு சென்றார்கள். அன்று மாலை சுமார் 3 மணியளவில் வெங்கடேசன் மீண்டும் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணுக்கு கூப்பிட்டு, ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் சார் அவர்கள் எனது நிலத்திற்கு பட்டா மாறுதல் செய்ய 20 ஆயிரம் கொடுக்கவேண்டும் என்று சொல்வதாக கூறினார். அதற்கு நான் நேரிலேயே ஆபீஸ் வருகிறேன் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். அன்று மாலை சத்தியமங்கலம் ஸ்பெசல் தாசில்தார் அலுவலகம் சென்று ஆர்ஐ திரு.பன்னீர்செல்வம் அவர்களை பார்த்தேன். அவர் அந்த அலுவலகத்தில் இருந்த ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் அவர்களை பார்க்கும்படி சொன்னார். அவர் சொன்னதுபோல் நான் ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் அவர்களை பார்த்தேன். அப்போது வெங்கடேசன் பட்டா மாறுதல் உத்தரவிற்காக நீங்கள் 20 ஆயிரம் கேட்பதாக சொல்லி என்னிடம் பணம் கேட்கிறார் என்று சொன்னேன். அதற்கு அவர் நான் தான் அவரிடம் சொன்னேன் என்று சொன்னார். நான் தொகை அதிகமாக உள்ளது, கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.5 ஆயிரம் குறைத்துக்கொள்வதாகவும், 15 ஆயிரம் கொடுத்துவிடுங்கள் பட்டா மாறுதல் உத்தரவு கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். நான், ரூ.15 ஆயிரம் தொகை அதிகமாக உள்ளது, மேலும் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் கடைசியாக 10 ஆயிரம் கொடுத்துவிடுங்கள், அதற்கு குறைவாக பட்டாமாறுதல் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார். என்னிடம் தற்போது அவ்வளவு பணம் இல்லை என்றும், பணத்தை ரெடிபண்ணிகொண்டு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், 23.1.2021-ம் தேதி

காலை சுமார் 10.30 மணிக்கு ஆர்ஐ பன்னீர்செல்வம் அவர்கள் செல்போனில் கூப்பிட்டு, பணம் எவ்வளவு கொடுக்கமுடியும் என்பதை வேல்முருகன் சாரிடம் பேசிவிட்டு பட்டா உத்தரவை வாங்கிட்டு போங்க என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். அன்று காலை சுமார் 11 மணிக்கு வெங்கடேசன் செல்போனில் என்னை கூப்பிட்டு, பணம் ரெடியாகிவிட்டதா என்று கேட்டுவிட்டு, பட்டா மாறுதலுக்கு ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் கேட்ட 10 ஆயிரம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு பட்டா மாறுதல் உத்தரவு வாங்கிக்கும்படி சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். பின்னர், வெங்கடேசன் 27.01.2021, 28.01.2021, 29.01.2021, 01.02.2021 மற்றும் 02.02.2021 ஆகிய தேதிகளில் என்னை செல்போனில் கூப்பிட்டு, எனது பட்டா மாறுதல் உத்தரவுக்காக ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் அவர்கள் கேட்ட 10 ஆயிரம் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டார். பிறகு இது சம்மந்தமாக யோசித்து பார்த்தேன். எனது பேரில் பட்டா மாறுதல் உத்தரவு பெற ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் அவர்கள் நேரடியாகவும், வெங்கடேசன் என்ற புரோக்கர் மூலமும் லஞ்சமாக கேட்கும் 10 ஆயிரத்தை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, பட்டா மாறுதல் உத்தரவிற்காக லஞ்சமாக 10 ஆயிரம் பணம் கேட்கும் ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஸ்பெசல் தாசில்தார் வேல்முருகன் லஞ்சமாக கேட்ட பணம் 10 ஆயிரத்தை கொண்டு வந்துள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, கையொப்பம் XXXX (S.அலிமுல்லா) 2/2/21

Sir, Received the above said computer typed complaint on 02.02.2021 at 10.30 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.03/AC/2021 u/s 7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 12.00 hrs today on 02.02.2021. Sd/- (xxxxxxxx) 02.02.2021 M.Rekha, Inspector of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.S.Alimulla, S/o Sanaulla, 34A, Anna Nagar, Thelkaradu Street, Rangasamuthiram, Sathyamangalam, Erode District is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

(M.Rekha) 02/02/2021
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.